யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

சாவகச்சேரி

# பரிசில் நாள் அறிக்கை 2016

தலைவர்

## திரு.க.உதயகுமாரன் அவர்கள்

(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர்

## உயர்திரு.செ.உதயகுமார் அவர்கள்

(மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்)

29.07.2016

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

சாவகச்சேரி

# பரிசில் நாள் அறிக்கை
# 2016

தலைவர்

## திரு.க.உதயகுமாரன் அவர்கள்

(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர்

## உயர்திரு.செ.உதயகுமார் அவர்கள்

(மாகாணக் கல்விப்பணிப்பாளர் வடமாகாணம்)

**29.07.2016**

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
சாவகச்சேரி

# பரிசில் நாள் - 2016

காலம் :- 29.07.2016 வெள்ளிக்கிழமை மை

நேரம் :- பிற்பகல் 3.00 மணி

இடம் :- வித்தியாலய மகாலிங்கம் அரங்கு

தலைவர்

**திரு.க.உதயகுமாரன் அவர்கள்**

(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர்

**உயர்திரு.செ.உதயகுமார் அவர்கள்**

(மாகாணக் கல்விப்பணிப்பாளர் வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

**உயர்திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்கள்**

(வலயக் கல்விப்பணிப்பாளர்,தென்மராட்சி)

கௌரவ விருந்தினர்

**உயர்திரு.க.மயில்வாகனம் அவர்கள்**

(ஓய்வுநிலை அதிபர்)

நிகழ்வு சிறக்க தங்கள் நல்வரவைக்கண்டு உவகை அடைகின்றோம்

# பாடசாலைக் கீதம்

**இராகம் - சங்கராபரணம்** **தாளம் - ஏகம்**

வடகீழ் நாட்டின் வளமிகு பதியென வகுத்ததென் மட்டுவிலதனில்
வள்ளல்முத்து உபாத்தியார் தந்த வனப்புறு கல்விக் கழகம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை //

ஆயிரத்தொழு தொள்ளாயிரத்தெட்டாம் ஆண்டு வைகாசி நாள் எட்டில்
அருளொளி பரப்பி நின்றறிவினை வளர்த்திட அமைத்தனன் நல்லறச்சாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை//

சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றி தகைபெற அமைத்த நற்சாலை
சாஸ்திரம் பற்பல பயிற்றிட வந்த சன்மார்க்க போதனாசாலை
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை//

இயல் இசை நாடகம் ஆங்கிலம் யாவும் இனிதாய் வளர்துமே ஓங்க
இளஞ்சிறு மாணவர் மனத்திடை என்றும் எழில்பெறும் அணையாத்தீபம்
அது தலைமுறை தலைமுறை வாழ்க எங்கள் சரஸ்வதி வித்தியாசாலை//

வாழ்க வாழ்க வாழ்க!
வாழ்க நீடூழி வாழ்க!

வாழ்க நீடூழி வாழ்க!

## பாடசாலை இலச்சினை

## மகுட வாசகம்

ஓதுவது ஒழியேல்

## தூர நோக்கு

இருபத்தோராம் நூற்றாண்டில் பொருந்தி வாழும் நற்பிரஜைகளை உருவாக்கும் நிறுவனமாகத் திகழ்தல்

## பணிக்கூற்று

தேசிய மாகாணக் கல்விக் கொள்கைகளுக்கு இசைவாக சாத்தியமான வாய்ப்புக்களை ஒருங்கிசைத்து எதிர்காலப் பொருத்தப்பாடுடைய மனித வளத்தை உருவாக்குதல்

# யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

## பரிசில் நாள் - 2016

29.07.2016 வெள்ளிக்கிழமை பி.ப. 3:00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

1. விருந்தினருக்கு மாலை அணிவித்து வரவேற்றல்
2. மங்கல விளக்கேற்றல்
3. இறைவணக்கம்
   - ✓ தேவாரம்
   - ✓ கிறீஸ்தவ கீதம்
4. தேசியக் கொடியேற்றல்
5. தேசிய கீதம் இசைத்தல்
6. பாடசாலைக் கொடியேற்றல்
7. பாடசாலைக் கீதம் இசைத்தல்
8. நிறுவுநர் படத்திற்கு மலர்மாலை அணிவித்து விளக்கேற்றல்
9. வரவேற்பு நடனம் - வித்தியாலய மாணவிகள்
10. வரவேற்புரை – ஆசிரியர் திருமதி ந. சிவநேசன்
11. பரிசில் நாள் அறிக்கை – அதிபர்
12. பரிசில் வழங்கல்
13. குழுநடனம் - வித்தியாலய மாணவிகள்
14. கல்விக்கான உதவி வழங்குநர் கௌரவிப்பு
15. கௌரவ விருந்தினர் உரை
16. குழுப்பாடல் - வித்தியாலய மாணவிகள்
17. Recitation by Mast. R. Abivishnu
18. சிறப்பு விருந்தினர் உரை
19. பேச்சு – செல்வன் வி. விதுஷன்
20. English Group Song - வித்தியாலய மாணவிகள்
21. பிரதம விருந்தினர் உரை
22. நன்றியுரை – ஆசிரியர் திரு சி. பகீரதன்
23. தமிழ்த்தாய் வாழ்த்து

## வித்தியாலய முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை

எமது பாடசாலையின் இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு . செ. உதயகுமார் அவர்களே! இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் வலயக்கல்வி பணிப்பாளர் உயர்திரு சு.கிருஸ்ணகுமார் அவர்களே! கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் ஓய்வு நிலை அதிபர் உயர்திரு. க.மயில்வாகனம் அவர்களே! இவ் வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் திரு. வ.நடராசா அவர்களே ! கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே! எமது பாடசாலையின் கௌரவிப்பை பெற வருகை தந்திருக்கும் ஓய்வு நிலை ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.குமாரசுவாமி ஞானேஸ்வரி அம்மா அவர்களே! அயற்பாடசாலையின் அதிபர்களே! முதன்மை ஆசிரியர்களே ஓய்வு நிலை அதிபர்களே! ஆசிரியர்களே! ஓய்வுபெற்ற கல்வியியலாளர்களே! கல்வி சாரா ஊழியர்களே! நலன் விரும்பிகளே பெற்றோர்களே, பழைய மாணவர்களே அன்பான மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரிற்கும் எனது இந்நேர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### முதன்மை விருந்தினர் அவர்களே!

வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆகிய நீங்கள் இலங்கையின் பல மாவட்டங்களின் கல்விக்காக அரும்சேவை புரிந்திருந்த போதிலும், தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்துள்ளீர்கள், அக் காலத்தில் தென்மராட்சி மண் தங்கள் சேவையைத் தாங்கி நின்றது. தற்போது நீங்கள் வடக்கு மாகாணத்தின் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுவதன் நிமித்தம் தென்மராட்சி மீண்டும் தங்கள் சேவையைப் பெற பெரும் பேறு பெற்றுள்ளது. அந்த வகையில் தாங்கள் இவ்வித்தியாலயத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதை எண்ணி நாம் பேருவகை அடைகிறோம், வாழ்க உங்கள் கல்விப் பணி! வளர்க எம் மண்ணின் மாணவச்செல்வங்கள்!!

### சிறப்பு விருந்தினர் அவர்களே!

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.சு.கிருஸ்ணகுமார் அவர்களே! தென்மராட்சிக் கல்வி வலயத்தை தாங்கள் தாங்கி நிற்பது தென்மராட்சி பெற்ற வரப்பிரசாதமாகும். இவ்வலயத்தின் பாடசாலைக் கல்வி மட்டுமல்ல முன்பள்ளி மற்றும் சமூக மறுமலர்ச்சிக்காக தங்களை காலநேரம் பாராது அர்ப்பணித்து உழைக்கின்றீர்கள். உங்கள் உழைப்பிற்கு நிகர் நீங்களே! நீங்கள் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிப்பது எமது பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்க்கின்றது.

**கௌரவ விருந்தினர் அவர்களே !**

இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு கௌரவ விருந்தினராகக் வருகை தந்து கலந்துகொண்டிருக்கும் ஓய்வு நிலை அதிபர் உயர்திரு. க.மயில்வாகனம் அவர்களே! தாங்கள் அதிபராகவும், நகராட்சி மன்ற உறுப்பினராகவும் இருந்து எம்மக்களிற்கு நிறைந்த சேவையாற்றியுள்ளீர்கள் தங்கள் சேவை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எமது பாடசாலையின் கௌரவிப்பை பெற எமது அழைப்பை ஏற்று வருகைதந்திருக்கும் ஓய்வுநிலை வடகிழக்கு மாகாண ஆங்கில பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் செல்வி.குமாரசுவாமி ஞானேஸ்வரி அம்மா அவர்களே! தாங்கள் எமது பாடசாலையின் மாணவச் செல்வங்களிற்கு வழங்கி வரும் கல்வி ஊக்குவிப்பு நிதிகள், ஏனைய கல்வி சார் பணிகள் அனைத்தும் தங்களின் அளப்பரிய கல்விப் பணியினை எடுத்தியம்புகின்றன. தங்கள் தொடர எனது நல் வாழ்த்துக்கள்.

எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் பிரதிக் கல்விப்பணிப்பாளாகளே, உதவிக் கல்விப்பணிப்பாளாகளே, கோட்டக்கல்வி அலுவலர் அவர்களே, ஏனைய பாடசாலை அதிபர்களே, முதன்மை ஆசிரியர்களே, ஆசிரியர்களே, மற்றும் பாடசாலையின் நலன்விரும்பிகளே, பாடசாலை சமூக உறவுகளே, அரச அரசசார்பற்ற உத்தியோகத்தர்களே, அனைவரையும் மீண்டும் ஒருமுறை வருக வருகவென அன்புரிமையுடன் வரவேற்று பாடசாலையின் பரிசில் நாள் அறிக்கையை முன்வைக்கின்றேன்.

**பாடசாலை வரலாறு**

1908 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 08 ஆம் திகதி அமரர் .முருகேசு முத்துதம்பி உபாத்தியாயரால் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இவ்வருடம் 108 ஆவது ஆண்டினை நிறைவு செய்து வெற்றி நடை போடுகின்றது. தென்மட்டுவில் பகுதியில் சிறந்த கல்விச் சேவையை வாரி வழங்கி வருகின்றது. வறுமைக் கோட்டுக்குட்பட்ட இப்பாடசாலை மாணவர்களது அறிவுப் பசியைத் தீர்க்கும் ஆலயமாக மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை கல்வி இணைபாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**மாணவர் விபரம்**

| பிரிவு | தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | 1-5 | 30 | 31 | 61 |
| கனிஸ்ட இடைநிலைப் பிரிவு | 6-9 | 46 | 38 | 84 |
| சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு | 10-11 | 17 | 16 | 33 |
| | | **93** | **85** | **178** |

**ஆசிரிய ஆளணி விபரம்**

| | |
|---|---|
| நிரந்தர ஆசிரியர்கள் | 17 |
| பகுதி நேர ஆசிரியர்கள் | 04 |
| கல்விசாரா ஊழியர்கள் | 03 |

**ஆசிரிய வகை**

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 07 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 10 |

**சேவை ரிதியாக விபரம்**

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 - 01

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 - 06

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I - 02

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-II - 08

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3-I - 01

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3-II - 01

**இடமாற்றம் பெற்றுச் சென்றோர்**

திரு.செ.பேரின்பநாதன் - இ.அ.சே வகுப்பு 1
– யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வித்தியாலயம்
திரு.க.குமரன் - இ.ஆ.சே வகுப்பு 2 II
– ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி கல்வி வலயம்
திருமதி.ஸ்ரீ.ஞானச்சந்திரன் இ.ஆ.சே வகுப்பு 1
– யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்
திருமதி.றா.இராஜன் இ.ஆ.சே வகுப்பு 2 II
– யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு.ம.லினாஷ்குமார் அவர்கள் 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் சேவை தரம் 3 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர்சேவை தரம் 3 இற்கு உள்வாங்கப்பட்டு சேவை முன்பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றார் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

**எமது ஆசிரியர் குழாத்தோடு புதிதாக இணைந்தவர்கள்**

திருமதி. தே. பேரின்பன் - முழு நேர ஆசிரியர்

திரு. சு. குகதாசன் - 02 நாட்கள் இப் பாடசாலையில் சேவை

திருமதி நி. யோகசீலன் - 03 நாட்கள் இப் பாடசாலையில் சேவை

**கல்விச் செயற்பாடு**

எமது பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடானது அர்ப்பணிப்பும் சேவை மனபாங்கும் மிக்க ஆசிரியர் குழாத்தினரால் எமது மாணவச் செல்வங்களிற்கு வழங்கப்படுகின்றது. அந்த வகையில் 2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரீட்சையின் பெறுபேற்று விபரம் வருமாறு,

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளியைப் பெற்றோர் | 70 புள்ளிகளிற்கு மேல் பெற்றோர் | 70 புள்ளிகளிற்கு மேல் சித்தி % |
|---|---|---|---|---|
| 2015 | 23 | 04 | 70 | 73.09 |

இதில செல்வி பிரதீபன் டனிஷா 181 புள்ளிகள் பெற்று வலயமட்டத்தில் 3 ஆம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 37 ஆம் இடத்தை பெற்றுள்ளார். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர் திரு.சி.சிவானந்தம் அவர்களையும் ஏனைய ஆரம்ப கல்வி ஆசிரியர்களையும் மனமார பாராட்டுகின்றேன்.

**2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேற்று விபரம்**

| ஆண்டு | தோற்றியோர் | சித்தி | வீதம் |
|---|---|---|---|
| 2015 | 12 | 02 | 16.06 |

இதில் செல்வி.த.கிருஷிகா B,5C,2S செல்வன் கௌ. அனோஜன் B,4C,3S பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். இவர்களை கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றனர்.

**இணைபாடவிதான செயற்பாடுகள்**

மாணவர்களிடம் தலைமைத்துவம் ஆளுமைவிருத்தி, அழகியல் உணர்வு உடல் உள ஆரோக்கியம் என்பவற்றை வளர்ப்பதில் இணைபாட விதான செயற்பாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. வருடந் தோறும் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டி, ஆங்கில தினம், தமிழ்மொழித்தினம் ஆகியவற்றில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர்.

2015 ஆம் ஆண்டு வலயமட்ட அறநெறி மனனப்போட்டியில் தரம் 02 ர. கஜலக்ஷிகா சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரைப் பயிற்றுவித்த தரம் 02 வகுப்பாசிரியை திருமதி ற. பாஸ்கரன் அவர்களை பாராட்டுகின்றேன்.

வலயமட்ட சித்திரப் போட்டியில் தரம் 04 த. பானுஜன் 2ஆம் இடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார், இவரைப் பயிற்றுவித்த தரம் 04 வகுப்பாசிரியை திருமதி றா. றாஜன் அவர்களை பாராட்டுகின்றேன்.

வலய மட்ட சைவசமய கண்காட்சியில் தரம் 07 ச.அபிவிஷ்ணு 1ம் இடத்தையும், தரம் 06 செ.யதுஷின் 2ம் இடத்தையும், தரம் 10 வி.விதுஷன் 2ம் இடத்தையும், தரம் 11 செ.ஜெனார்த்தனன் தேர்ச்சியையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கிய சமய பாட ஆசிரியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வலய மட்ட சமூகவிஞ்ஞானப் போட்டியில் தரம் 07 மாணவன் லா.லக்ஷன் 1ம் இடம் பெற்றுள்ளார். இவரைப் பயிற்றுவித்த ஆசிரியர்களான திருமதி கௌ. சந்திரகுமார் மற்றும் திரு. ம.லினாஸ்குமார் ஆகியோரை பாராட்டுகின்றேன்.

வலய மட்ட ஆங்கிலதினப் போட்டியில் செல்வன் ச. அபிவிஸ்ணு Recitation 1ம் இடத்தையும், செல்வி ச.அபிஸ்ணவி Recitation 3ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர் திரு. சி. பகீரதன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

வலய மட்ட கணித வினாவிடைப் போட்டியில் தரம் 08 மாணவன் ஜெ. ஜெகதீஸ்வரன் 1ம் இடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரை பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி. உ. பாலசுந்தரம் அவர்களைப் பாரட்டி வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வுகளான செம்பு நடனம் நாதநர்த்தனவர்ண நிகழ்விலும் மானாட்டம் வலய பௌர்ணமி விழாவிலும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகளைப் பயிற்றுவித்த ஆசிரியை திருமதி. ஆ. பிறின்ஸ் திருமதி.ஜெ.முகில்வண்ணன் ஆசிரியர்கள் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

வலய மட்ட மெய்வன்மைப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் செல்வன். கு. லக்ஷன் குண்டு போடுதல், தட்டு எறிதல் ஆகிய நிகழ்ச்சிகளில் 2ம் இடம் பெற்றுள்ளார். 13 வயதுப் பிரிவில் செல்வி. அ. விதுஷாளினி 100M ஓட்டத்தில் 3ம் இடம் பெற்றுள்ளார். இவர்களைப் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் திரு இ. அனுஜன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிடைக்கப் பெற்றவளங்கள்**

சுற்றுச் சூழல் சுகாதாரத்தைப் பேணும் வகையில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் "கழிவகற்றல் முகாமைத்துவக் கூடம்" அமைத்துத் தரப்பட்டுள்ளது. அதன் செயற்பாட்டின் அடிப்படையில் சுற்றுச் சூழல் சுகாதாரத்தைப் பேணும் வகையில் சுகாதார ஒப்பளவு அடிப்படையில் புள்ளி வழங்கப்பட்டு வெண்கலப் பதக்கத்திற்குரிய சான்றிதழ் மாகாண கல்வி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாணவர் மன்றச் செயற்பாடுகள்**

மாணவர்களின் சுய ஆற்றலை வெளிக்கொணரச் செய்வதற்கும் தனி ஆளுமை விருத்திக்காகவும் பின்வரும் கழகங்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியர்களின் வழி நடத்தலுடன் சிறப்பாக நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- தமிழ் மன்றம்
- ஆங்கில மன்றம்
- இந்துமா மன்றம்
- சுகாதார கழகம்
- சமூக விஞ்ஞான மன்றம்
- அனர்த்த பாதுகாப்புக் குழு
- அழகியல் மன்றம்

போன்ற மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன

வருடந்தோறும் இந்து மன்றத்தினரால் தைப்பொங்கல் விழா,, சித்திரை புதுவருடக் கொண்டாட்டம், குரு பூசைதினம், ஆடிப்பிறப்பு, நவராத்திரிவிழா என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. குருபூசைதினம் கொண்டாடுவதற்கு எமது பாடசாலை பழைய மாணவி திருமதி. அஜித்தா ராஜ் அவர்கள் ரூபா 20000.00 தந்துதவியுள்ளார். அவருக்கும் எமது பாடசாலை சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கணணி வள நிலையம்**

உலக மயமாக்கலின் விளைவாக நவீன மண தொழில் நுட்ப ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கில் எமது பாடசாலையின் மிகச் சிறப்பான முறையில் 15 கணணிகளுடன் செயற்பட்டு வருகின்றது. பொறுப்பாசிரியர் திரு.ம.லினாஸ்குமார் அவர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் இயங்கிக் கொண்டு வருகின்றது. இவர் வலய மட்ட வன்பொருள் தீர்வு அணியில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்து.

மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்று வருகின்ற சூழ் நிலையும் காணப்படுவதுடன் பாடசாலைக்கு என்ற www.mssarasawathy.sch.lk என்ற இணையத்தளமும் School1003021@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரியையும் கொண்டு செயற்பட்டு வருவதுடன் 2015 ஆம் ஆண்டு தகவல் தொடர்பாடல் பாடத்தில் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் தோற்றி மாணவர்களில் 100% சித்தியை பெற்று சாதனை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை நூலகம் ( கற்றல் வள நிலையம்)

பாடசாலை நூலகத்திற்கு என்று தனியான கட்டிடம் இல்லாத போதிலும் வகுப்பறை ஒன்றை நூலகமாக மாற்றி மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை விருத்தி செய்வதோடு அவர்களின் அறிவுத் தேடலையும் பூர்த்தி செய்து வருகின்றது. ஏறக்குறைய 900 வரை கொண்டுள்ள நூலகமானது சஞ்சிகைகள், பரீட்சை வழிகாட்டிகள், கடந்த கால பரீட்சை வினாத் தொகுதிகள் என்பவற்றை தாங்கி நிற்கின்றன. மேலும் தமிழ் பத்திரிகையும் இதற்கான ஆங்கில மொழி பத்திரிகையை : செல்வி.ஞானேஸ்வரி குமாரசுவாமி அவர்கள் அன்பளிப்பாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்ளது.

**ஆங்கில செயற்பாட்டு அறை**

ஆங்கில பாடத்திற்கென தனியான வசதிகளுடன் கூடிய செயற்பாட்டு அறை வகுப்பறை ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது. நவீன கற்பித்தல் சாதன பயன்பாட்டு மூலம் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற அதே வேளை மாணவர்கள் பல போட்டிகளிலும் பங்கு பற்றி சான்றிதழ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கற்றல் வள நிலையத்தின் ஆசிரியர் திரு. சி.பகீரதன் அவர்கள் சிறப்பாக செயற்பாட்டு வருகின்றார். இவர் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆங்கில பாடத்திற்கான போதனா ஆசிரியர் குழாமில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**விஞ்ஞான ஆய்வு கூட அறை**

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தரம் 2 பாடசாலைகளில் முதன்மை பெறும் பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்று. அந்த வகையில் விஞ்ஞான ஆய்வு கூட கட்டிடம் இல்லாத போதிலும் வகுப்பறை ஒன்றில் விஞ்ஞான பாட செயன்முறை விரிவாக்கம் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் போன்றன இடம்பெற்று வருகின்றது. அத்துடன் நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் கற்பித்தலை இணைத்து செயற்படுத்த விஞ்ஞான ஆய்வு கூட அறையுடன் சேர்த்து ஒரு அலகு பேணப்பட்டு வருகின்றது. இவ் வித்தியாலயத்திற்கு முறையான விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை அமைப்பதுடன் பல்நோக்கு காட்சி ஒன்றை அமைப்பதன் ஊடாக ( Multi Media Room) விஞ்ஞானத்துறை மற்றும் ஏனைய பாட கற்றலை விருத்தி செய்வதற்கு ஏதுவாக அமையும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**மாணவர் சேமிப்பு கணக்கு**

இவ் வித்தியாலயத்தின் மாணவர்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்த வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறை படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் மாணவர்கள் பரீட்சையில் வெற்றி பெறும் மாணவர்களிற்கு பரிசில் தொகை அதிகரிப்பும் கிடைக்கப்பெற்று வருகிறது. இவ்விடத்தில் வங்கியாளர்களின் சேவைகளை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**மெல்லக் கற்கும் மாணவர்களிற்கான செயற்திட்டம்**

பாடரீதியில் அடைவு குறைந்த மாணவர்களிற்கான பாடத் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு மேலதிக நேர அட்டவணை வழங்கி பாட மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் அர்ப்பணிப்போடு செயற்படும் ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**விசேட கற்றல் செயற்திட்டம்**

பொது பரீட்சையை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் வினைத்திறனை மேம்படுத்த மேலதிக வகுப்புக்களும் ஆண் மாணவர்களின் சுய கற்றலை ஊக்கப்படுத்தவும் உறுதிப்படுத்துவதற்காகவும் இரவு நேர கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச் செயற்திட்டத்தில் தம்மை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்தி வருகின்ற ஆசிரியர்களான திரு. ஞா.இன்பகரன் , திரு. ம.லினாஸ்குமார், திரு.சி.பகீரதன், திரு. சி.சிவானந்தம் ஆகியோருடன் கல்வி சாரா ஊழியர்களும் தங்களை அர்ப்பணித்து உழைத்து வருகின்றனர். இவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**சத்துணவு திட்டம்**

உலக உணவுத்திட்டத்தின் கீழ் இயங்கி வரும் இத்திட்டமானது உலக உணவுத்திட்ட அதிகாரிகள், கோட்ட வலயக் கல்வித் திட்ட அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது. இத்திட்டத்தை இயக்கி வரும் பாடசாலை உணவுக் குழு சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர் சகோரத்துவம்**

பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் குடும்பமாக பணியாற்றுவதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. பாடசாலையின் முகாமைத்துவக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் சகோதரத்துவ ஆசிரியர்களின் நலன்களை கவனிப்பதிலும் இடமாற்றும் பெறும் மற்றும் சாதனை படைக்கும் ஆசிரியர்களை கௌரவிப்பதிலும் பெருமை அடைகின்றது.

**பாடசாலை அபிவிருத்திக் குழு**

இப் பாடசாலை சமூகத்தின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் வலய உறுப்பினர்களை உள்ளடக்கி அதிபரின் தலைமையில் சிறப்பாக

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந் நாள் பரிசில் நாளை நடாத்துவதற்கு காரணகர்த்தவாக அமைந்த இக் குழு முழுப் பொறுப்பையும் ஏற்று இந் நிகழ்வினை சிறப்பாக நடாத்திவருகின்றமை சிறப்பம்சமாகும்.

இச் செயற்பாட்டில் பாடசாலை அபிவிருத்தி குழுவின் பொருளாளர்,செயலாளர் அவர்களின் பங்கு அளப்பரியது.

**பாடசாலையின் பௌதிக, கற்றல் வள விருத்தி தேவைகள்**

- ❖ ஆரம்ப பிரிவு மாணவர்கள் சுயமாக தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு செயற்பாட்டறை.
- ❖ வீடியோ ஓடியோ மல்ரி மீடியா நிலையம்
- ❖ நூல் நிலையம் (கற்றல் வள நிலையம்)
- ❖ பாடசாலையின் பாதுகாப்பின் பொருட்டு சுற்று மதில்
- ❖ மாணவர்களிற்கான துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்
- ❖ கவின்நிலையுடன் கூடிய அலுவலக அறை
- ❖ விஞ்ஞான ஆய்வு கூடம்
- ❖ நவீன வசதிகளுடன் ஆசிரியர்களிற்கான மலசலகூட வசதி

**ஆசிரியர் தேவை**

- ➢ ICT கற்பிற்கும் ஆசிரியர் அதிபர் தரம் பெற்று சென்றதால் ICT கற்பிற்கும் ஆசிரியர் தேவை
- ➢ தரம் 3 இல் கற்பித்த ஆசிரியை மாவட்ட இடமாற்றம் பெற்றுச் சென்றதால் தரம் 3 இல் கற்பிற்க ஆசிரியர் தேவை.

**கற்றல் நிதி உதவிகள்**

- ➢ 2015 ஆம் ஆண்டில் டென்மார்க்கில் வதியும் எமது பாடசாலையின் பழையமாணவி, 13 மாணவர்களுக்கு ரூபா 60795.00 பெறுமதியான கற்றல் உபகரனங்களை வழங்கியுள்ளார்.
- ➢ வடகிழக்கு மாகாண ஓய்வுநிலை ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி குமாரசாமி ஞானேஸ்வரி அவர்கள் தவணை ஒன்றுக்கு ரூபா.5000 வீதம் ரூபா.15000 எமது மாணவச் செல்வங்களுக்கு தந்துதவுகிறார்.

- மட்டுவில் கனடாநலன்புரிச் சங்கத்தினர் வருடாந்தம் ரூபா.5000 வீதம் நான்கு மாணவர்களுக்கு வழங்கிவருகின்றனர்.

- சைவப் புலவர் அமரர் கு.வி. மகாலிங்கம் அறக்கட்டளை நிதியத்தினர் எமது மாணவர்கள் மூவருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி உள்ளனர்.

- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் இரண்டு மாணவர்களுக்கு ரூபா 1500 வீதம் கற்றல் நிதிவழங்கியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எமதுபாடசாலைசமூகம் சார்பாக நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் இவ்வாறான உதவிகளை வழங்கி வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**மாணவர் புலமைப் பரிசில் நிதியம்**

அமரர் திருமதி. சந்திரா சிவகுருநாதன் புலமைப் பரிசு
செல்வி. த. கிருஷிகா – க.பொ.த. (சா.த) பரீட்சையில் B,5C,2S பெற்றமைக்காக வழங்கப்பட்டு வருகின்றது.

திரு. திருமதி. நாகராஜா புலமைப் பரிசு
மாணவன் செல்வன். வி. விதுசன் – 2015 தமிழ் மொழித்தினம் பேச்சு - 3ம் இடம் பெற்றமைக்காக வழங்கப்பட்டு வருகின்றது.

**வளத் தேவைகள்**

எமதுபாடசாலைமாணவர்களின் பாடவிதானசெயற்பாடுகள் வினைத்திறனும் விளைதிறனும் மிக்கதாகஅமைவதற்குவிஞ்ஞானஆய்வுகூடம், நூலகம்,விளையாட்டுமைதானம்,பாடரீதியானஅறைகள் என்பனஅத்தியாவசியதேவையாகஅமைகின்றன.

- விஞ்ஞான ஆய்வுகூடம், கற்றல் வள நிலையம் மற்றும் பாடத்துறைசார்ந்த விஷேட அறைகள் அமைக்கக்கூடிய வகையில் 110’x25’x2 அளவுடைய மாடிக்கட்டடம் தேவை

- ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொளடவதற்கு ஓர் செயற்பாட்டறை

- வீடியோ, ஓடியோ மல்ரி மீடியா நிலையம்

- சுற்றுமதில்

- கவின் நிலையுடன் கூடிய அலுவலக அறை புனரமைப்பு

- ஆசிரியர்களுக்கான மலசலகூட வசதி

**நன்றியுரை**

பல்வேறு வேலைப் பழுக்களின் மத்தியிலும் எமது அன்பான அழைப்பையேற்று முதன்மை விருந்தினராக வந்திருக்கும் மாகாணக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! தாங்கள் எமது மாணவச் செல்வங்களின் அடைவுகளுக்கு வெகுமதியளித்து, கலை நிகழ்வையும் பார்வையிட்டு, இன்றைய பரிசில் நாள் உரையை நிகழ்த்த வந்திருக்கின்றமைக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டிருக்கும் வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களே!

எமது அழைப்பையேற்று மகிழ்வுடன் வருகை தந்து சிறப்புவிருந்தினர் உரையாற்ற உள்ளமைக்காக எமது மனம் நிறைநத் நன்றிகள்.

மேலும் இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் கலந்துகொண்டிருக்கின்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்களே! கோட்டக் கல்வி அலுவலர்களே! அதிபர்களே! முதன்மை ஆசிரியர்களே! ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளே! ஓய்வுநிலை அதிபர்களே! ஆசிரியர்களே! கடந்த காலங்களில் எமது பாடசாலையில் கற்பித்து இடமாற்றலாகிச் சென்ற அசிரியர்களே! மற்றும் நலன்விரும்பிகளே! பெற்றோர்களே! எமது பாடசாலை ஆசிரியர்களே! மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் எமது உநம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

இந் நிகழ்வு நிறைவானதாக அமைய நிதியுதவி வழங்கிய பெற்றோர்கள், புலம் பெயர் பாழையமாணவர்கள், பாடசாலை ஆசிரிய குழாத்தினர், வங்கியாளர்கள், நலன் விரும்பிகள் யாவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இப் பரிசில்நாள் சிறப்புற நடைபெற முழுமனத்துடன் தம்மை அர்பணித்து என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஆளணியினர்கள், பெற்றேர்கள், நலன்விரும்பிகள், மாணவ தலைவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அன்புரிமையுடன் நன்றி கூறுகின்றேன்.

நன்றி

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் — க.உ.தயகுமாரன்

சாவகச்சேரி — அதிபர்

16.05.2016

**ஆளணி விபரம் - 2016**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.க.உ தயகுமாரன் | SLPS 1 | பயிற்றப்பட்ட விவசாயம் |
| 2 | திரு.பொ.இராயேந்திரா | SLTS I | பயிற்றப்பட்ட சித்திரம் |
| 3 | திரு.ம.லினாஸ்குமார் | SLTS 2 II | கலைப்பட்டதாரி |
| 4 | திரு.சி.சிவானந்தன் | SLTS 2 I | கலைப்பட்டதாரி |
| 5 | திரு.ஞா.இன்பகரன் | SLTS 2 II | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் |
| 6 | திரு.சி.பகீரதன் | SLTS 2 II | தேசிய கற்பித்தல் டிப்ளோமா( ஆங்கிலம்) |
| 7 | திரு.ஐ.தெய்வேந்திரன் | SLTS 2 II | பயிற்றப்பட்ட விவசாயம் |
| 8 | திரு. சு. குகதாசன் | SLTS 2 II | வர்த்தகப் பட்டதாரி |
| 9 | திரு.எஸ்.ஆர்.ரஞ்சிதராஜ் | SLTS 3 I | கலைப்பட்டதாரி |
| 10 | திருமதி.ந.சிவநேசன் | SLTS I | கலைப்பட்டதாரி |
| 11 | திருமதி.இராஜகுலேந்திரன் | SLTS I | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 12 | செல்வி.சி.கந்தசாமி | SLTS I | பயிற்றப்பட்ட மனைப் பொருளியல் |
| 13 | திருமதி.உ.பாலசுந்தரம் | SLTS I | பயிற்றப்பட்ட கணிதம் |
| 14 | திருமதி.கௌ.சந்திரகுமார் | SLTS I | கலைப்பட்டதாரி |
| 15 | திருமதி.ற.பாஸ்கரன் | SLTS 2 II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 16 | திருமதி.ஜெ.முகில்வண்ணன் | SLTS 2 I | கலைப்பட்டதாரி |
| 17 | திருமதி.ஆ.பிறின்ஸ் | SLTS 2 II | நுண்கலைப் பட்டதாரி |
| 18 | திருமதி.தே. பேரின்பன் | SLTS 2 II | தேசிய கற்பித்தல் டிப்ளோமா |
| 19 | திருமதி.ச.சுதர்சன் | SLTS 3 II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 20 | திருமதி.நி. யோகசீலன் | SLTS 3 II | உடற்கல்வி டிப்ளோமா |

| யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | | |
|---|---|---|
| 2015 கல்வியாண்டில் பரிசில் பெறும் மாணவர் விபரம் | | |
| தரம் - 01 | | |
| இல. | மாணவர் பெயர் | பரிசில் பெறும் பாடங்கள் |
| 01 | யோ. அர்ச்சுதன் | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 02 | ச. துஸ்மிதன் | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 03 | பா. நிருத்திகன் | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 04 | பு. யாமினி | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 05 | டி. ரம்சிகா | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 06 | நி. நிதர்சனா | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 07 | சி. தருனிகா | கணிதம் |
| தரம் - 02 | | |
| 08 | பா. சாருஜன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 09 | ச. அஜய் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 10 | ம. நிக்ஸ்சன் | தமிழ், கணிதம் |
| 11 | அ. சயானுஜன் | தமிழ், கணிதம் |
| 12 | அ. அபிலன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 13 | ர. கஜலக்ஷிகா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 14 | சி. அபர்ணா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 15 | இ. கீர்த்தனா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 16 | கி. கிருத்திகா | தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 17 | சு. விதுஜா | தமிழ் |
| தரம் - 03 | | |
| 18 | தீ. சீராளன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 19 | ம. கனிஸரன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 20 | சி. சிசாந்தன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 21 | து. சங்கவி | தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 22 | சு. சுஜானா | தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 23 | ர. சியானா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 24 | பி.. பிரஷா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 25 | த. ஹர்ணிகா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 26 | பு. சர்மிகா | தமிழ், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 27 | சி. அபிநயா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 28 | சி. பிரணவி | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 29 | ம. ஷாலினி | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| தரம் - 04 | | |
| 30 | பா. பானுஜன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 31 | அ. நற்குமரன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 32 | ஞா. லோசனன் | தமிழ், சமயம் |
| 33 | து. டானுஷா | தமிழ், சமயம், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| தரம் - 05 | | |
| 34 | வ. சஞ்ஜய் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 35 | இ. வத்ஸரன் | கணிதம் |
| 36 | ர. சுடரோன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| 37 | ஜெ. துவாரகன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்தேர்ச்சி |
| 38 | சி. தருணிகா | சமயம், கணிதம், சுற்றாடல் |
| 39 | ர. நிவேதிகா | சமயம், சுற்றாடல் |
| 40 | து. கவிப்பிரியா | சமயம், கணிதம் |
| 41 | சி. சுவேதா | சமயம், கணிதம், சுற்றாடல் |
| 42 | ஜெ. துவாரகா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 43 | வ. சரோணியா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 44 | பி. டனிஷா | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுத்தேர்ச்சி |
| 45 | மோ. வைஷ்ணவி | கணிதம், சுற்றாடல் |

| | | |
|---|---|---|
| | | |
| தரம் - 06 | | |
| 46 | மோ. ஜெனுசன் | சமயம், விஞ்ஞானம், புவியியல், சங்கீதம், சுகாதாரம், P.T.S. |
| 47 | பா. சூரியா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சங்கீதம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 48 | செ. யதுஷன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சங்கீதம், சுகாதாரம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 49 | பா. லினோஜன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சங்கீதம், சுகாதாரம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 50 | ஸ்ரீ. ருபிஞ்யன் | சங்கீதம், |
| 51 | பி. பிரதீபா | சங்கீதம், |
| 52 | த. தர்மிகா | நடனம் |
| 53 | தி. சயந்தா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சங்கீதம், பொதுத் தேர்ச்சி |
| 54 | ச. அபிஸ்ணவி | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 55 | ர. சர்மிளா | நடனம் |
| தரம் - 07 | | |
| 56 | ஜெ. தனுஷன் | சமயம், குடியியல், சங்கீதம், |
| 57 | லா. லக்ஷன் | சமயம், தமிழ், வரலாறு, குடியியல், புவியியல், சுகாதாரம், சங்கீதம், P.T.S. கணிதம், பொதுத் தேர்ச்சி |
| 58 | பா. ஸ்ரீராம் | குடியியல், சங்கீதம், |
| 59 | ச. நிருத்திகன் | சமயம், குடியியல், சங்கீதம் |
| 60 | பா. புவிதன் | சமயம், தமிழ், கணிதம், குடியியல், சங்கீதம், P.T.S. |
| 61 | ச. அபிவிஸ்ணு | சமயம், தமிழ், கணிதம், குடியியல், P.T.S. வரலாறு, புவியியல், சுகாதாரம், சித்திரம், பொதுத் தேர்ச்சி |
| 62 | வீ. மதுர்ஷன் | சமயம், தமிழ், குடியியல், சங்கீதம், கணிதம், P.T.S. சுகாதாரம் |
| 63 | ஜே. ஜெனினா | சமயம், தமிழ், குடியியல், நடனம், P.T.S. |
| 64 | ஜெ. டிலானி | சமயம் |
| 65 | பா. சோபினி | சமயம், தமிழ், வரலாறு, குடியியல், புவியியல், சுகாதாரம், சங்கீதம், P.T.S. கணிதம், விஞ்ஞானம், பொதுத் தேர்ச்சி |
| 66 | பா. வைஸ்ணவி | சமயம், தமிழ், குடியியல், புவியியல், நடனம், P.T.S. |
| 67 | றோ. கம்சிகா | சமயம், நடனம், கணிதம், குடியியல், புவியியல், P.T.S. |
| 68 | சு. வினோஜா | சங்கீதம் |
| 69 | சு. விதுஷாளினி | சமயம் |
| தரம் - 08 | | |
| 70 | ஜெ. ஜெகதீஸ்வரன் | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், சுகாதாரம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 71 | செ. தர்சிகன் | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், சுகாதாரம், பொதுத் தேர்ச்சி |
| 72 | பா. இலக்ஷன் | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், சுகாதாரம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 73 | ர. யசோதரன் | தமிழ், கணிதம், வரலாறு, சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், P.T.S. |
| 74 | நீ. கபிஞ்சன் | தமிழ், சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், P.T.S. |
| 75 | த. பிரதீப் | தமிழ், சுகாதாரம், P.T.S. |

| | | |
|---|---|---|
| 76 | சு. விதுஷன் | தமிழ், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், |
| 77 | கி. விதுஷன் | வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், |
| 78 | கு. டிரோன் | வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், |
| 79 | ந. பதுமிகா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், சுகாதாரம், P.T.S. பொதுத் தேர்ச்சி |
| 80 | ச. சஞ்சியா | சமயம், தமிழ், P.T.S. |
| 81 | ஞா. லோஜினி | சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும், |
| 82 | கு. கீர்த்திகா | தமிழ், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் |
| 83 | ர. லக்ஜனா | கிறிஸ்தவம் |
| **தரம் - 09** | | |
| 84 | தி. பிருந்தன் | P.T.S., குடியியல் |
| 85 | வி. தேனிலவன் | தமிழ், P.T.S. |
| 86 | சி. வித்தியா | சமயம், தமிழ், P.T.S. குடியியல், சுகாதாரம் |
| 87 | ச. துர்க்கா | P.T.S. சுகாதாரம், குடியியல், |
| 88 | ஜே. ரம்சிகா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், நடனம், P.T.S. சுகாதாரம், குடியியல், பொதுத்தேர்ச்சி |
| 89 | இ. மிதிலா | சமயம், தமிழ், நடனம், P.T.S. சுகாதாரம், குடியியல், |
| 90 | நா. மதுசா | P.T.S. சுகாதாரம் |
| 91 | த. ஜனனி | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சங்கீதம், P.T.S. சுகாதாரம், குடியியல், பொதுத்தேர்ச்சி |
| 92 | ப. அர்ச்சணா | சமயம், தமிழ், புவியியல், P.T.S. குடியியல், |
| 93 | சு. நிருஜா | சமயம், P.T.S. சுகாதாரம், குடியியல், |
| **தரம் - 10** | | |
| 94 | கெ. சஞ்சித் | விவசாயம் |
| 95 | செ. ஜெனார்த்தனன் | கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் |
| 96 | வி. விதுசன் | தமிழ், ஆங்கிலம், வரலாறு, குடியியல், தமிழ் இலக்கியம் |
| 97 | பா. லக்சிகா | கிறிஸ்தவம், குடியியல், சங்கீதம், மனைப்பொருளியல் |
| 98 | பா. தர்சிகா | குடியியல், தகவல் தொழில்நுட்பம், சைவநெறி |
| 99 | வி. கஜனிதா | சங்கீதம் |
| **தரம் - 11** | | |
| 100 | கௌ. அனோஜன் | விஞ்ஞானம், விவசாயம் |
| 101 | த. கிருஷிகா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, குடியியல், சங்கீதம், ICT |

**இணைபாடவிதான செயற்பாடுகள்-2015**

அறநெறி மனனம்- வலயமட்டம்

தரம்-3 ர.கஜலக்ஷிகா –சிறப்புத்தேர்ச்சி

சித்திரப்போட்டி- வலயமட்டம்

தரம் -4 ந.பானுஜன் -2 ஆம் இடம்

சைவசமயக்கண்காட்சி –வலயமட்டம்

தரம் - 6 செ.யதுசன் (சைவசமயக்கண்காட்சி ) -2 ஆம் இடம்
தரம் -10 வி.விதுசன் சைவசமயக்கண்காட்சி, -2 ஆம் இடம்
தமிழ் தினப் போட்டி பேச்சு - 3ஆம் இடம்
தரம் -10 செ.ஜெனார்த்தனன் - தேர்ச்சி

சமூகவிஞ்ஞானப் போட்டி –வலயமட்டம்

தரம் -7 லா.லக்சன் - 1 ஆம் இடம்

**விளையாட்டுப்போட்டி – வலயமட்டம்**

15 வயதுப் பிரிவு கு.லக்சன் தட்டு எறிதல், குண்டு போடுதல் - 2ஆம் இடம்
13 வயதுப் பிரிவு சு.விதுசாளினி 100m ஓட்டம் -3 ஆம் இடம்

**வலய மட்ட கபடிப் போட்டி - 3ஆம் இடம்**

ஜெ.அனோஜன் - தரம் 9
சி.அனுஜன் - தரம் 9
கு.லக்சன் - தரம் 10
ற.கஜிந்தன் - தரம் 9
கி.விதுசன் - தரம் 8
செ.தர்சிகன் - தரம் 8
த.பிரதீப் - தரம் 8
ஜெ.ரஜீவன் - தரம் 8
ஸ்ரீ. கபிஞ்ஞன் - தரம் 8
து. கபிசன் - தரம் 8

**கணித வினாடிப் வினாப் போட்டி**

தரம் 8- ஜெ.ஜெகதீஸ்வரன் - 1 ஆம் இடம்

**நூலகவாரம் -போட்டி (ஆரம்பக்கல்வி)**

பிரிவு – 1
ச.அஜய் – புதிர்போட்டி – தேர்ச்சி
சி.அபர்ணா – சித்திரம் வரைதல் - தேர்ச்சி
இ.கீர்த்தனா –கதை கூறல் -தேர்ச்சி
பா. சாருஜன்- வாசிப்பு – தேர்ச்சி

பிரிவு -2
ந.பானுஜன் - கட்டுரை,ஒட்டுச்சித்திரம் , குறுக்கெழுத்துப் போட்டி –தேர்ச்சி
அ.நற்குமாரன் -கதைகூறல் ,வாசிப்பு – தேர்ச்சி

பிரிவு -3
வ.சரோணியா –கட்டுரை – தேர்ச்சி
ஜெ.துவாரகா –கதைகூறல் -தேர்ச்சி,
பா.டனிஷா – வாசிப்பு – தேர்ச்சி
சி.சுவேதா – சித்திரம் வரைதல், குறுக்மெழுத்துப் போட்டி- தேர்ச்சி

பிரிவு -4
யே.ஜெனினா – கட்டுரை –தேர்ச்சி
பா.லினோஜன் -வாசிப்பு –தேர்ச்சி
ச.அபிவிஸ்ணு – ஓவியம் - தேர்ச்சி, சைவசமயக் கண்காட்சி English day competition Recitation – 1st place
ச.அபிவைஸ்ணவி – கழிவுப்பொருள் ஆக்கம் - தேர்ச்சி , English day competition Recitation – 3rd place

**பிரிவு -5**
சு.விதுஷன் - கட்டுரை –தேர்ச்சி
ப.அர்ச்சனா – சுவரொட்டி – தேர்ச்சி
ர.லக்ஜனா – கைவினைப் பொருளாக்கம் - தேர்ச்சி
த.ஜனனி – பாடலாக்கம் -தேர்ச்சி

**பிரிவு -6**
து.கிருஷிகா –கட்டுரை- தேர்ச்சி
ப.ஜேன்சன் -ஓவியம் -தேர்ச்சி
பா.தர்சிகா –சிறுகதை ஆக்கம் - தேர்ச்சி
பா. லக்சிகா –கவிதை –தேர்ச்சி

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை -2015

### புலமைப்பரிசில் வெட்டுப் புள்ளிகளிற்கு மேல் பெற்று சித்தி அடைந்தோர்

பி.டனிஷா -181 புள்ளிகள்
ஜெ.துவாரகா -166 புள்ளிகள்
வ.சரோணியா -157 புள்ளிகள்
ஜெ.துவாரகன் -156 புள்ளிகள்

### 70 புள்ளிகளிற்கு மேல் பெற்று சித்தி அடைந்தோர்

வி.டிகேசன் - 87 புள்ளிகள்
ம.சரண்ராஜ் - 74 புள்ளிகள்
ர.சுடரோன் - 111 புள்ளிகள்
க.துசானன் -71 புள்ளிகள்
இ.வத்சரன் -100 புள்ளிகள்
வ.சன்சய் -133 புள்ளிகள்
ர.நிவேதிகா -83 புள்ளிகள்
து.கவிப்பிரியா -113 புள்ளிகள்
சி.சுவேதா -140 புள்ளிகள்
இ.சோபிகா -97 புள்ளிகள்
சி.தருணிகா -98 புள்ளிகள்
மோ.வைஸ்ணவி -105 புள்ளிகள்

### 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர தரப்பரீட்சையில் சித்தி பெற்றோர்

தவச்செல்வம் கிரிஷிகா – B, 5C, 2S
கௌரிராசா அனோஜன் - B, 4C, 3S

### சிறந்த மாணவர் தெரிவு

அ. நற்குமரன் – தரம் 5
சி.பிரணவி – தரம் 4
ஜெ. ஜெகதீஸ்வரன் - தரம் 9
ப. லக்ஷிகா - தரம் 11

சிறந்த மாணவர்களுக்கான பரிசினை ஸ்தாபகர் அமரர் திரு. முருகேசர் முத்துத்தம்பி அவர்களின் ஞாபகார்த்தமாக திருமதி சிவனேஸ்வரி தபேந்திரன் (ஆசிரியை) அவர்களின் நிதி உதவியுடன் இப்பரிசு வழங்கப்படுகின்றது.